வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். C.C. 212/2022

வழக்கு சாட்சி- **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | அகிலாண்டேஸ்வரி | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கண்ணன் | : | தொழில் | சத்துணவு அமைப்பாளர் |
| கிராமம் | திருக்காட்டுப்பள்ளி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 34/2024 |

(1ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 வது எதிரி ஆஜர்)

**<u>நாள் : 24.04.2024</u>**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சத்துணவு அமைப்பாளராக வேலை செய்து வருகின்றேன். எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 2022ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை. திருக்காட்டுப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நான் சமைத்து முடித்துவிட்டு வீடு திரும்பிவிட்டேன். மறுநாள் காலை நான் சென்று பார்த்தபோது அடுப்பு, இரும்பு டிரம் மற்றும் தகவல் பலகை ஆகியவைகள் காணாமல் போய் இருந்தது. தலைமை ஆசிரியரிடம் சென்று தகவல் கூறினேன். அவரும் நானும் திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையம் சென்று நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது நான் அளித்ததுதான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) (**தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் இரும்பு டிரம் மற்றும் கம்பிகள்தான் காணாமல் போனவை. அவைகள் அரசு தரப்பு சான்றுப் பொருள்கள் 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**